தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 263 - அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீட்டு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீண்டெழும் செலவினங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2023 கொண்ட தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 4(iii) ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளின்படி, 263-1-1-0-1409-138 செலவின விடயத்தின் கீழ் இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான சேவைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்தும், அதற்கு மாறாக, ரூபா 1.04 மில்லியன் பெறுமதியான வளிச்சீராக்கி திருத்தச் செலவுகள் அந்தக் குறியீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் எதிர்காலத்தில் கவனமாக சரியான செலவின விடயத்தின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செலவினக் குறியீடுகள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டுள்ள முறைக்கு இணங்க கணக்கு வைக்கப்பட்டல் மற்றும் வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், இவ்வாறான தவறுகளைத் தவிர்க்க பயனுள்ள உள்ளகக் கணக்காய்வு முறைமை நிறுவப்பட வேண்டும்.

(ii)	1201 செலவின விடயத்தின் கீழ் எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகளுக்கான மீண்டெழும் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்தச் செலவின விடயத்தின் கீழ் மாவட்டச் செயலகத்தின் பராமரிப்புப் பிரிவுக்குத் தேவையான ரூபா 244,005 பெறுமதியான இருப்புப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும நுகர்வுப் பொருட்களாகக் கருதி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனவும்.	- மேற்படி -
(iii)	மாவட்டச் செயலகத்தின் வளிச்சீராக்கி திருத்தங்களுக்காகச் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 1.78 மில்லியன் பெறுமதியான செலவுகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்புக்கான 263-1-1-0-1302 செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்படாமல், பல்வேறு சேவைச் செலவுகளுக்கான 263-1-1-0-1409-140 செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும குளிரூட்டி திருத்தச் செலவு அதிகரித்தமையினாலும், நிதிப் பற்றாக்குறையினாலும் இவ்வாறு கணக்கு வைக்கப்பட்டதாகவும், எதிர்காலத்தில் சரியான செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்படும் எனவும்.	- மேற்படி -

(ஆ) மூலதனச் செலவினங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	லுணுகம்வெஹெர புதிய பிரதேச செயலகக் கட்டடத்தில் திரைச்சீலைகள் பொருத்துவதற்காக, 263-1-1-0-2001 செலவின விடயத்தின் கீழ் ரூபா 5.83 மில்லியன் மதிப்பீட்டுப்பட்டிருந்தும், அதற்குப் பதிலாக ரூபா 5.39 மில்லியன் 263-1-1-0-2104 செலவின விடயத்தின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்தது.	கட்டடத்தின் ஆரம்பச் செலவாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்பது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செலவினக் குறியீடுகள் வகைப்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டுள்ள முறைக்கு இணங்க கணக்கு வைக்கப்பட் வேண்டியதுடன், மதிப்பீட்டுகள் இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் உள்ளக வேலைத் திட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

ii)	வேறு 08 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகளுக்காக 1201 செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூபா 301,514 மாவட்டச் செயலகத்தின் பராமரிப்புப் பிரிவுக்குத் தேவையான மூலதனச் செலவின் கீழ் வரும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மூலதனப் பொருட்கள் நுகர்வுப் பொருட்கள் மற்றும் பராமரிப்பு உபகரணங்களாகக் கண்டறியப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனவும்.	நிதிப் பிரமாணம் 208(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	அகுணகொலபெலஸ்ஸ புதிய பிரதேச செயலகக் கட்டட நிர்மாணம் - கட்டம் III இன் கீழ் மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 37 மில்லியன் 9160 - நடைமுறை வேலைகள் (WIP) பிரதான பேரேட்டுக் கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், அது 9151 - குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்பட்டதால், குடியிருப்பு அல்லாத கட்டடங்களின் பெறுமதி அதிகமாகவும், நடைமுறை வேலைகளின் பெறுமதி குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் 2025 ஆம் ஆண்டில் சரியான முறையில் சிகாஸ் கணக்கீட்டு முறைமையில் கணக்கு வைக்கப்படும் எனவும்.	கணக்கு மீதிகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்க நிறுவனத்தினுள் பொருத்தமான உள்ளகக் கணக்காய்வு பரீட்சிப்பு நிறுவப்பட வேண்டும்.
(ii)	அகுணகொளபெலஸ்ஸ பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்ட அரச வீட்டினது பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்தவுடன், அந்தப் பெறுமதியை சிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்யப்படும் எனவும்.	நிதிக்கூற்றுக்கள் சரியான நிதி நிலைமையினைக் காட்டுவதற்காக, சொத்துக்களைச் சரியாக மதிப்பீடு செய்து புத்தகங்களில் பதிவு செய்வதை விரைவாகச் செய்ய வேண்டும்.
(iii)	மாவட்டச் செயலகத்துக்குச் சொந்தமான ஆறு உழவு இயந்திரங்கள், ஐந்து டிரெய்லர்கள் மற்றும் இருபது மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் இந்த ஆண்டில் உரிய முறைமையின் கீழ் மதிப்பீடு செய்யப்படுவதற்கு மற்றும் நிதியல்லாத சொத்துக்களின்	- மேற்படி -

		கீழ் உள்ளீடு செய்யப்படுவதற்கு மற்றும் பயன்படுத்தப்படாத வாகனங்களை உரிய முறையில் அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் எனவும்.	
(iv)	கட்டுவன பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான, அந்த பிரதேச செயலகப் பிரிவினுள் உள்ள 07 கிராம அலுவலர் அலுவலகங்கள் இயங்கும் 07 காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	அளவீடு செய்யப்பட்டு ஒதுக்கப்படாததால் மதிப்பீடு செய்ய முடியாது என்பது மற்றும் எதிர்காலத்தில் அளவீடு செய்யப்பட்டு மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	- மேற்படி -
(v)	லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணி மற்றும் பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான 36 சேவைப் பிரிவு கட்டடங்கள் மற்றும் அவை அமைந்துள்ள 36 காணிகள் ஆகியவற்றின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	காணிகளை மதிப்பீடு செய்ய கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பது , காணி மதிப்பீட்டுக்கான வரைபடங்கள் மற்றும் உரிமைச் சான்றுபடுத்தும் ஆவணங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், 2025.02.05 அன்று மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 03 சேவைப் பிரிவு கட்டடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது.	- மேற்படி -

(ஈ) முற்பணக் கணக்கு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
அகுணகொலபெலஸ்ஸ புதிய பிரதேச செயலகக் கட்டிட நிர்மாணம் - கட்டம் III இன் கீழ் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் அவற்றின் மீள்செலுத்துகைகள் பேரேட்டுக் குறிப்புகள் மூலம் கணக்கு வைக்கப்படாததால், நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ள முற்பண நிலுவையும், வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்க மீதியும் ரூபா 8.47 மில்லியனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் வேலைக்கான முற்பணங்களைச் செலுத்துகையில் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயற்பட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்பது.	அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும்.

(உ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	ஓகெவெல புதிய பிரதேச செயலகக் கட்டடம் அமைந்துள்ள காணியின் பெறுமதியாக சிகாஸ் (CIGAS) கணக்கீட்டு முறைமையில் உள்ளீடு செய்யப்பட்டிருந்த ரூபா 24.8 மில்லியன் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீட்டு அறிக்கைகள் மீளாய்வாண்டு முடிவடையும் வரையிலும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் குறித்த பெறுமதி சிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது என்பது மற்றும் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் சரியான பெறுமதி சிகாஸ் முறைமையில் உள்ளீடு செய்யப்படும் எனபது.	பெறுமதியைச் சரியாக உறுதிப்படுத்துவதற்குத் தேவையான மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்வுக்கு விரைவாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ii)	அகுணகொலபெலஸ்ஸ பிரதேச செயலகத்தின் நிதியியல் அல்லாத சொத்துக்களாக சிகாஸ் (CIGAS) கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் உள்ளீடு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 7.29 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டடங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின்படி பெறுமதி சிகாஸ் கணனி முறைமையில் உள்ளீடு செய்யப்பட்து என்பது.	உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பது

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த 1.6.1 (அ) ii, iv, 1.6.1 (ஆ) i, iv, 1.6.1 (இ) ii, iii, iv, v மற்றும் 1.6.1 (உ) i, ii பந்திகளில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) வரவு செலவு மதிப்பீட்டுடைத் தயாரித்தல்		
(i) மீளாய்வாண்டில் செலவின விடயம் இலக்கம் 263-1-1-0-2001 கட்டடங்கள் மற்றும் நிர்மாணப் பராமரிப்புக்காக 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 30.76 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 14.97 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்றும் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், வருடத்தினுள் செய்ய வேண்டிய அவசரத் தேவைகளான பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்பது	மதிப்பீட்டுகள் இயன்றவரை சரியாகவும் உரிய கவனத்துடனும் தயாரிக்கப்பட வேண்டியதுடன் பொருத்தமான முறையில் மீளாய்வு செய்யப்பட்டு முழுமையாகப் பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) 2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட 04/2023 இலக்கமுடைய தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 4.1(iii) பந்தியின்படி, அத்தியாவசியமான பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்கான ஒதுக்கீடுகள் மதிப்பீட்டுகள் மூலம் ஒதுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும், கட்டடங்கள் மற்றும் நிர்மாணப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவின விடயத்தின் கீழ் (2001) 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்படாமல், மாவட்டச் செயலகம் மற்றும் 08 பிரதேச செயலகங்களின் நிர்மாணப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்காக மீளாய்வாய்டில் 09 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 12.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்றும் மற்றும் வருடத்தினுள் செய்ய வேண்டிய அவசரப் பணிகளாகக் கருதி மேற்கொள்ளப்பட்டது என்றும்.	வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி மதிப்பீட்டுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு மாத்திரம் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க முறையான உள்ளக வேலைத்திட்டம் நிறுவப்பட வேண்டும்.

(ஆ)	2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட 04/2023 இலக்கமுடைய தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் மூலம், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை அத்தியாவசியத் துறைகளுக்குத் ஈடுபடுத்துவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் செலவுகளையும் நிதி வளங்களையும் மிகக் கவனமாக, சிறந்த ஒழுக்கத்துடனும் பொறுப்புடனும் முகாமைத்துவம் செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும், பின்வரும் சந்தர்ப்பங்களில் மாவட்டச் செயலகம் அவ்வாறு செயற்படவில்லை என அவதானிக்கப்பட்டது.		
(i)	263-1-1-01-1201 எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் செலவின விடயத்தின் கீழ் வராததும், 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படாததுமான அரச வீட்டுக்காகப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்ய மொத்தம் ரூபா 291,290 செலவு மேலே குறிப்பிட்ட செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட செலவின விடயத்தின் கீழ் எழுதுகருவிகள் மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கான மதிப்பீட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் அரசாங்கத்தின் உயர் உத்தியோகத்தர்கள் அடிக்கடி வந்து செல்லும் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அத்தியாவசியமான ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கோரப்பட்டதால், அந்தச் செலவின விடயத்தின் கீழ் கொள்வனவு செய்து வழங்கப்பட்டது என்றும்.	வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கைக்கு முரணாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான செலவின விடயத்தின் கீழ் தனிப்பட்ட நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்யாமல், ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாத்திரம் அந்த ஒதுக்கீடுகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 1.3 பந்தியின்படி, செலவுகளை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், பொது நிதியின் இடத்தின் வரம்புகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை அத்தியாவசியத் துறைகளுக்கு ஈடுபடுத்துவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் செலவுகளை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும்	ஒலி உறிஞ்சும் மர மேடைக்குப் பொருத்தமானதாகவும், அதன் பெறுமதியை மேலும் அதிகரிக்கக்கூடியதாகவும் தானியங்கித் திரைச்சீலைகளைப் பயன்படுத்துவது அலுவலகத்தின் மண்டபத்துக்கு அத்தியாவசியமாக இருந்ததால் செலவு செய்யப்பட்டது என்றும் மற்றும் எதிர்காலத்தில் மண்டபத்தை வெளியில்	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்க நிதியைச் சிக்கனமாகவும், அத்தியாவசியமாகவும், காலத்திற்கேற்றவாறும் பயன்படுத்தும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

	முகாமைத்துவம் செய்வது மிகவும் முக்கியமானது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 128 (ஐ) மற்றும் 156(7) இன் பிரகாரம் சிக்கனமாகச் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், இந்தக் ஏற்பாடுகளில் கவனம் செலுத்தாமல், லூணுகம்வெஹெர பிரதேச செயலகம் மண்டபத்தின் மேடைக்கான திரைச்சீலைகளுக்கு ரூபா 5.39 மில்லியன் செலவு செய்திருந்தது. பொதுச் சேவைகளை வழங்குதல் மற்றும் பிரதேச நிர்வாகத்தை நோக்கமாகக் கொண்ட பிரதேச செயலகத்தின் இலக்குகளை அடைவதற்கு இவ்வாறான செலவைச் செய்யும் அவசியம் செலவு செய்த நேரத்தில் இருந்ததா என்பது கேள்விக்குரியது.	உள்ள தரப்பினருக்குக் கட்டணம் அறவிட்டு வழங்குவதன் மூலம் அரசாங்கத்துக்கு வருமானம் ஈட்ட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் .	
(இ)	நிதிப் பிரமாணம் 66/69 இன் பிரகாரம் ஒதுக்கீடுகளை மாற்றுதல்.		
(i)	2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2023 கொண்ட தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 3.7 (iv) பந்தியின்படி, அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் உள்ள பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர், அப் பணிகளுடன் தொடர்புடைய சேவை வழங்கும் நிறுவனங்களுடன் அறிவித்தல்கள் மற்றும் முன் ஒப்புதல்கள் பெற்ற பின்னரே பணிகளைத் தொடங்குவது அத்தியாவசியம் எனக் குறிப்பிடப்பட்டிருநத போதிலும், 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமல், நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண செலவின விடயத்திலிருந்து (2104) ரூபா 30 மில்லியன் ஒதுக்கீடு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் செலவின விடயத்துக்கு (2103) மாற்றப்பட்டு, சூரிய சக்தி திட்டத்தை	சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் திட்டங்களைச் செய்வதற்குத் தேவையான முன் தயாரிப்புப் பணிகளைச் செய்யாததால் இந்த ஒதுக்கீடு மீதமிருந்தது என்பது.	எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்களைச் செய்யும்போது, மதிப்பீட்டு செய்தல் மற்றும் ஒதுக்கீடுகளை மாற்றுதல் போன்றவற்றை வினைத்திறனுடன் உரிய கவனத்துடனும் மேற்கொள்ள வேண்டியதுடன், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் திட்டங்களைச் செய்வதற்குத் தேவையான முன் தயாரிப்புப் பணிகள் நிறைவடைந்ததை உறுதிசெய்த பின்னரே திட்டங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்காததால், நிதிப்பிரமாணம் 66 மூலம் மாற்றப்பட்ட ரூபா 30 மில்லியன் ஒதுக்கீடு மீளாய்வாண்டு முடிவடையும் வரையிலும் மீதமாக இருந்தன.		
(ii)	மதிப்பீட்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் நிதி ஆண்டிற்குள் செலவு செய்வதற்குப் போதுமானதாக இல்லை என்றும், செலவுகள் அந்த ஒதுக்கீடுகளை விஞ்ச வாய்ப்புள்ளது என்றும் காணப்பட்டால், மேலதிக நிதி ஒதுக்கீடுகளைச் சேமிப்பிலிருந்து மாற்றலாம் என நிதிப்பிரமாணம் 66 இல் குறிப்பிடப்பட்டிருந்தும், 2024 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்தின் 2001 செலவின விடயத்தின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்கான அத்தியாவசியப் பராமரிப்புப் பணிகளைச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டு ரூபா 1.3 மில்லியன் ஒதுக்கீடு நிதிப்பிரமாணம் 66 இன் படி மாற்றப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மாற்றிய பின்னரும் மீளாய்வாண்டு முடிவடையும்போது ரூபா 3.09 மில்லியன் ஒதுக்கீடு மீதமிருந்தது.	நடந்துகொண்டிருக்கும் ஒரு திருத்த வேலைக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டை, அதன் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கையகப்படுத்தி வேறு பணிக்காகப் பயன்படுத்த முடியாததால் ரூபா 1,300,000 ஒதுக்கீடு பெறப்பட்டது என்பது.	எதிர்வரும் வருடங்களின் மதிப்பீட்டுகளைத் தயாரிக்கும்போதும், ஒதுக்கீடுகளை மாற்றும்போதும், அரசாங்க நிதியினைச் சிக்கனமாகவும், அத்தியாவசியமாகவும் பயன்படுத்தப்படும் வகையில் மதிப்பீட்டுகளைத் தயாரிக்க வேண்டியதுடன் முறையான மீளாய்வுக்குப் பின்னரே ஒதுக்கீடுகளை மாற்ற வேண்டும்.
(iii)	2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2023 தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் 4.2 (ஆ) பந்தியின்படி, 2023 ஜூன் 30 ஆம் திகதியில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் தனித்தனியாகக் கணக்கீடு செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவுகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தும், அந்த விடயங்களில் கவனம் செலுத்தாத	எதிர்கால வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுகளைத் தயாரிக்கும்போது, சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின்படி உண்மையான ஊழியர் எண்ணிக்கையின் அடிப்படையில் மதிப்பீட்டுகளைத் தயாரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்பது.	- மேற்படி -

காரணத்தினால் (1203) உணவு மற்றும் பானங்கள் மற்றும் சீருடைகள் செலவின விடயத்திற்கு ரூபா 600,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் ரூபா 372,000 நிதிப்பிரமாணம் 66/69 இன் படி வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

3.2 எல்லகள் பின்பற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) நிதிப்பிரமாணம் 503 (2) இன் பிரகாரம், ஏதேனும் எல்லை மீறல் ஏற்பட வாய்ப்புள்ளதை அறிந்தவுடன் அதற்கு முன் அனுமதி பெற வேண்டும் எனவும், 2024 ஜனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2024 தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தும், அந்தக் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் செயற்பட்டமையினால், அரச உத்தியோகத்தர்களின் முற்பண ”பீ” கணக்கின் ரூபா 80 மில்லியன் உச்ச செலவு வரம்பை மீறி ரூபா 353,742 செலவிடப்பட்டிருந்தது. இந்த எல்லை மீறல்களைச் சரிசெய்வதற்காக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி தேசிய வரவு செலவுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 மார்ச் 27 ஆம் திகதி வரையிலும் அதற்கு அனுமதி கிடைத்திருக்கவில்லை.	எல்லையினைத் திருத்துவதற்கான கடிதம் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் எதிர்காலத்தில் இவ்வாறான எல்லை மீறல்கள் நடைபெறாமல் இருக்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர் என்றும்.	நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி எல்லைகளைப் பின்பற்றக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சின் ரூபா 162.4 மில்லியன் ஒதுக்கீட்டின் மூலம், ரூபா 162.38 மில்லியன் செலவிடப்பட்டு அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட இளம் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள் முன்னோடித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் முறையான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல்களும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் வழிகாட்டல் தயாரிக்கப்படாவிட்டாலும், மாவட்டச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட பொது அறிவுறுத்தல் பத்திரிகைக்கமைய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது.	எதிர்காலத்தில் திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில், திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் முறையான வழிகாட்டல் மற்றும் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், திட்டங்களைத் திட்டமிடும்போது அதன் நிலையான தன்மை குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	காளான் கிராமத்தை நிறுவுவதன் மூலம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் காளான் பயிர்ச் செய்கையை விஸ்தரிக்கும் நோக்கில், அகுணகொளபெலஸ்ஸ மற்றும் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முறையே 31 மற்றும் இரு பயனாளிகளுக்கு காளான் வீடுகள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 11.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் திட்டத்துடன் தொடர்புடைய செயலாற்றுகைச் சுட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்காததுடன் செயலாற்றல் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், திட்டங்கள் குறித்து போதுமான மற்றும் வினைத்திறனான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பயனாளிக்கு காளான் வீடு அமைக்க ரூபா 376,780 வழங்கப்பட்டிருந்தாலும், வேறொரு	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதுடன் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது.	எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றதா என்பது குறித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உரிய கவனத்துடன் செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	தரப்பினரால் அங்கு சிறிய அளவில் காளான் உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.		
(இ)	விவசாயத்தில் இளைஞர்களைத் தக்கவைக்கும் திட்டத்தின் கீழ், பப்பாசி பயிர்ச்செய்கைத் திட்டத்திற்காக 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 80 பயனாளிகளுக்கு ரூபா 12.55 மில்லியன் பெறுமதியான நாற்றுக்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு மூலம் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் நாற்றுக்கள் வளராமை, எதிர்பார்க்கப்பட்ட அறுவடை இன்மை, நோய் தாக்கம், இயற்கைப் பாதிப்புக்குள்ளாதல், பயனாளிகள் மீண்டும் நாற்றுக்களைப் பயிரிடாமை மற்றும் பயிர்ச் செய்கையைக் கைவிடுதல் போன்ற காரணங்களால் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நிலைமைகள் காரணமாக சில பயிர்ச் செய்கைகள் தோல்வியடைந்துள்ளது என்பது மற்றும் எதிர்காலத்தில் களப் பரீட்சிப்பு மேற்கொண்டு அறிவுறுத்தல்கள் வழங்குவதாகவும், நோக்கங்களை அடைய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.	அரசாங்க நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டியதுடன், திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டியதுடன், காலத்திற்கேற்ற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மரக்கறிப் பயிர்ச் செய்கையின் விளைச்சலை அதிகரிப்பதற்கான திட்டத்திற்காக வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்ட ரூபா 238,090 பெறுமதியான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் மேலும் ஒரு பயனாளி அந்தப் பெறுமதியான உபகரணங்களில் வலைப் பகுதியை மாத்திரம் பயன்படுத்தியிருந்ததுடன் இரண்டு பயனாளிகளுமே கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரையிலும் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதுடன் தற்போது குறித்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது.	தேவையுள்ள பயனாளிகளைக் கண்டறிந்து, அரசாங்க நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்தி திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய முறையான கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் இவ்வாறான பயனாளிகளை உள்ளடக்கி கறுப்புப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(உ)	உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மரக்கறிப் பயிர்ச் செய்கையின் விளைச்சலை அதிகரிப்பதற்கான திட்டத்திற்காக உபகரணங்கள் வழங்கி கிட்டத்தட்ட ஒரு வருட காலம் கடந்துள்ள நிலையிலும், தங்காலை பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்ட பூச்சிக் கட்டுபாட்டு வலைகள் மற்றும் நீர்த் தெளிப்பு நீர்ப்பாசன முறைமை மற்றும் வேறு இரு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 122,500 பெறுமதியான 02 நீர் மோட்டர்கள் பயன்படுத்தப்படவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் இரண்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாவிட்டால் மீண்டும் கையகப்படுத்தி பொருத்தமான பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்பது மற்றும் ஒரு பயனாளி தற்போது வழங்கப்பட்ட உபகரணங்களைப் பயன்படுததுகின்றார் என்பது.	- மேற்படி -
(ஊ)	2024 ஏப்ரல் மாதத்தில் இளம் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள் திட்டத்தின் கீழ், தங்காலை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 06 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபா 1.99 மில்லியன் பெறுமதியான நீர் நீக்கும் இயந்திரங்கள் மற்றும் வெட்டும் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய சாத்தியக்கூறு ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2024 ஒக்டோபர் 15 ஆம் திகதி கணக்காய்வு செய்யப்பட்ட திகதியில் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட இரு (02) பயனாளிகள் சிறிய அளவில் உற்பத்திப் பணிகளைச் செய்வதாகவும், வேறொரு பயனாளிக்கு கால தாமதத்தின் பின்னர் கணக்காய்வு செய்யப்பட்ட திகதிக்கு அண்மையில் நீர் நீக்கும் மற்றும் வெட்டும் இயந்திரங்கள் வழங்கப்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் பெயரிடப்பட்ட பயனாளிகளுக்குத் தகுதிகள் இல்லாததால் வேறு தகுதியான பயனாளிகளுக்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டது என்பது மற்றும் அதற்காகச் சில காலம் சென்றது என்பது மற்றும் சந்தை வாய்ப்புகளைக் கண்டறிய வழிகாட்டல்கள் வழங்கப்படும் என்பது.	எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய சாத்தியக்கூறு ஆய்வு, முறையான கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	அன்னாசிப் பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் ரூபா 399,910 பெறுமதியான 29 பொலித்தீன் மறைப்புச் சுருள்கள் அன்னாசிப் பயிர்ச் செய்கைக்காகப் பயனாளிகளுக்கு வழங்கப்படாமல், 15 பொலித்தீன் சுருள்கள் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் பொலித்தீன் மறைப்பு தேவையில்லாததால், பயன்படுத்தக்கூடிய வேறு திட்டங்களுக்கு வழங்கப்பட்டது என்பது.	நோக்கமிட்ட பணிக்கு வளங்களைப் பயன்படுத்தாத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுத்தலும், எதிர்காலத்தில் தேவைகளை அடையாளம் கண்டு பொருட்களைக்

	வரையிலும் வீரகெட்டிய பிரதேச செயலக அலுவலகத்தில் செயலற்ற நிலையில் இருந்ததுடன் மீதமுள்ளவை இந்தத் திட்டத்திலிருந்து வெளியே உள்ள மிளகாய் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.		கொள்வனவு செய்ய வேண்டியதுடன் அரசாங்க நிதியைச் சிக்கனமாகவும், பயனுள்ளதாகவும் பயன்படுத்தும் வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஏ)	அன்னாசிப் பயிர்ச்செய்கைத் திட்டத்தின் கீழ் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்ட 1531 அன்னாசி நாற்றுக்கள் மற்றும் நீர்த் தெளிப்பு நீர்ப்பாசன முறைமை மற்றும் பெலியத்த பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்ட 1973 நாற்றுக்கள், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் நீர்த் தெளிப்பு நீர்ப்பாசன முறைமை என்பன வேறு இருவரால் பயன்படுத்தப்படுவதாகவும், அந்த அன்னாசிப் பயிர்ச்செய்கைகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு செயற்படுவதாகவும், உபகரணங்களைப் பயனாளிதான் பயன்படுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்பது.	எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் தகுதியான பயனாளிகளுக்குப் பலன்களை வழங்கவும் வேண்டும்.
(ஐ)	சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவில் அதி அடர்த்தி முறைமையின்படி கொய்யா பயிர்ச் செய்கை மாதிரி வழங்குதல் திட்டத்தின் கீழ் ரூபா 231,000 பெறுமதியான நன்மைகளைப் பெற்ற ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்ட கொய்யா நாற்றுக்களில் சுமார் ஐம்பது சதவீதம் அழிந்திருந்ததுடன் மீதமுள்ள நாற்றுக்களுக்கு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், பயிர்ச்செய்கை முறைமைக்கமைய GI குழாய்கள் மற்றும் கம்பிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், இதனால் செலவிடப்பட்ட ரூபா 231,000 வீணாகிவிட்டது எனவும் அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் பயனாளி நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் பயிர்ச்செய்கைப் பணிகள் தடைப்பட்டது என்பது மற்றும் எதிர்காலத்தில் சரியான பணிகளைச் செய்ய அறிவூட்டப்பட்டுள்ளது என்பது.	செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேறுகிறதா என்பது குறித்து உத்தியோகத்தர்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஒ)	சூரியவெவ பதிகங்க்தொட்ட கிராமத்தில் 21 பயனாளிகளுக்கு ஆப்பிள் கொய்யா கன்றுகள் 50, துளி நீர்ப்பாசன முறைமை வீதம் மொத்தம் ரூபா 1.47 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் நாற்றுக்கள்	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான விவசாய பிரதிப் பணிப்பாளர் மூலம் அறிக்கை கோரப்பட்டுள்ளது	செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும், அவ்வாறு இல்லாதவாறு கொள்வனவு

	விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், விநியோகிக்கப்பட்ட கொய்யா நாற்றுக்கள் ஆப்பிள் கொய்யா வகையைச் சாராதவை என்றும், இதனால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் பயனாளிகளுக்குக் கிடைக்காது என்றும் அவதானிக்கப்பட்டது.	என்பது மற்றும் அதற்கமைய முன்னேற்றத்தை அறிக்கையிடப்படும் என்பது.	செய்த உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஓ)	ஏற்றுமதிக்கான புளி வாழைப்பழம் பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 200 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபா 22,111,862 பெறுமதியான வாழை நாற்றுக்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஒக்டோபர் மாதம் வரையிலும் ஏற்றுமதிக்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், வாழை ஏற்றுமதி செய்வதற்காக அரசாங்கத்தின் வேறொரு திட்டத்தின் கீழ் ரூபா 45.672 மில்லியன் செலவில் கட்டப்பட்ட ஏற்றுமதி நிலையம் மற்றும் அங்கு நிறுவப்பட்ட இயந்திரங்கள் செயலற்ற நிலையில் இருந்தன. மேலும், பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 1.58 மில்லியன் பெறுமதியான பிளாஸ்டிக் கூடைகள் மற்றும் வர்ண ரிபன்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதால், இந்தத் திட்டத்தின் நோக்கங்களும் நிறைவேறவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் விவசாய அமைச்சின் மூலம் முறையான ஏற்றுமதிப் பணிகளுக்காக எந்தவொரு நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்படாததால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தாலும், தற்போது ஓரளவுக்கு ஏற்றுமதிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துமாறு பயனாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது.	செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பை முறையாகச் செய்யாத உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஔ)	தற்போது களத்தில் உள்ள புளி வாழைப்பழம் பயிர்ச் செய்கையை ஏற்றுமதிக்காக அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், சூரியவெவ பதிகங்க்தொட்ட கிராமத்தில் வாழைப் பயிர்ச்செய்கை செய்யும் பயனாளிகளுக்கு விநியோகம் செய்வதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 381,437 பெறுமதியான உபகரணங்கள் அலுவலக வளாகத்துக்கு வெளியில் உள்ள ஒரு இடத்தில் சேமிக்கப்பட்டிருந்தபோது காணாமல் போயிருந்த போதிலும், இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் ஆரம்பப் பரீட்சிப்பின் பரிந்துரைகளுக்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது.	நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரீட்சிப்பை ஆரம்பித்து, இழப்பை ஈடுசெய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	இன் ஏற்பாடுகளின்படி செயற்பட்டிருக்கவில்லை.		
(க)	சூரியவெவ பதிகங்க்தொட்ட பிரிவில் நிலக்கடலை திட்டத்தின் கீழ், நிலக்கடலைப் பயிர்ச்செய்கையின் பரப்பளவை அதிகரித்தல், நிலக்கடலை விதைகளைச் சுத்திகரிக்கும் செலவைக் குறைத்தல், நிலக்கடலை தொடர்பான சந்தைப்படுத்தலை எளிதாக்குதல் மற்றும் தொழில்முனைவோரை அதிகரித்தல் போன்ற நோக்கங்களுடன் ரூபா 121,500 பெறுமதியான நிலக்கடலை விதை பிரிக்கும் இயந்திரம் விவசாயக் குழுக்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ஒரு பயனாளிக்கு மாத்திரம் அந்த இயந்திரம் வழங்கப்பட்டமையினால், திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படாததுடன், ரூபா 25,000 விவசாயப் பங்களிப்பின் கீழ் இயந்திரப் பராமரிப்பு நிதியம் ஒன்றை நிறுவுவது திட்ட முதலீட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் திட்டத்திற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் எதிர்காலத்தில் திட்ட நோக்கங்களை அடையக்கூடிய வகையில் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.	குறித்த உத்தியோகத்தர்களை வழிநடத்தி, திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்ற விரைவான வேலைத் திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும்.
(ங)	குரக்கன் கதிர்களிலிருந்து விதைகளைப் பிரிக்கும் இயந்திரங்களை வழங்கும் திட்டத்தின் கீழ், பயிர்ச் செய்கைப் பரப்பளவை அதிகரித்தல், குரக்கன் சுத்திகரிக்கும் செலவைக் குறைத்தல், தொழில்முனைவோரை அதிகரித்தல் போன்ற நோக்கங்களுடன் ரூபா 325,000 பெறுமதியான இயந்திரம் விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்படும் என்று திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது சூரியவெவ பதிகங்க்தொட்ட பிரிவில் உள்ள ஒரு பயனாளிக்கு வழங்கப்பட்டிருந்தது. திட்டம் ஆரம்பித்து சுமார் ஒரு வருட காலம் ஆகியும், திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை எனவும், திட்ட முதலீட்டுத் திட்டத்தின் கீழ்	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் கண்காணிப்புச் செயல்முறையைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	- மேற்படி -

	குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 25,000 விவசாயப் பங்களிப்பின் கீழ் இயந்திரப் பராமரிப்பு நிதியம் ஒன்றும் நிறுவப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.		
(ச)	அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 05 பயனாளிகளுக்கு ஒவ்வொன்றும் ரூபா 139,500 வீதம் ரூபா 697,500 பெறுமதியான அரிசி மா உற்பத்தி இயந்திரங்கள் வழங்கப்பட்டு, அரிசி மா உற்பத்தித் திட்டம் ஆரம்பித்து கிட்டத்தட்ட ஒரு வருட காலம் ஆகியும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவது குறித்து மதிப்பீட்டுவதற்கான தகுந்த செயலாற்றல் சுட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்காததுடன், மக்கள் அரிசி சார்ந்த உற்பத்திகளுக்குத் திரும்புவதன் மூலம் அவர்களின் போஷாக்கு மற்றும் சுகாதார நிலையை அதிகரித்தல், அரிசி சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துதல், வெளிநாட்டு நாணயத்தைச் சேமித்தல், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் பிரதேசத்தின் பொருளாதார நிலையை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடையக்கூடிய வகையில் தகுந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படாது திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதும் அவதானிக்கப்பட்டது.	செயற்திட்டம் ஆரம்பக் கட்டத்தில் இருப்பதால், நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை அடையாவிட்டாலும், எதிர்வரும் வருடங்களில் திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதாகவும், எதிர்காலத்தில் தமது உத்தியோகபூர்வ கடமைகளை முறையாகச் செய்யுமாறு விடய உத்தியோகத்தர்க்கு எழுத்துமூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.	- மேற்படி -
(ஞ)	அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 விவசாயிகளுக்குப் பயனாளிப் பங்களிப்பு ரூபா 500,000 மற்றும் அரசாங்கப் பங்களிப்பு ரூபா 489,000 ஆக, மொத்தம் ரூபா 11.87 மில்லியன் பெறுமதியான டிரக்டர்களை வழங்கும் திட்டம் தொடர்பாக, மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப்	அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தாலும், 06 பிரதேச செயலக அலுவலகங்களில் இருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டது என்பது	வெளிப்படைத்தன்மையின்றி பயனாளிகளைத் தெரிவு செய்தமை தொடர்பாக உரிய தரப்பினர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய உத்தியோகத்தர்களை

	பிரிவுகளின் விவசாயிகளையும் உள்ளடக்கும் வகையில் அறிவூட்டல்கள் செய்யப்பட்டு, வெளிப்படைத்தன்மையுடன் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதாக அவதானிக்கப்படாததுடன் 12 டிரக்டர்களில் 07 டிரக்டர்கள் அகுணகொலபெலஸ்ஸ மற்றும் பெலியத்த பிரதேச செயலகப் பிரிவுகளின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நெற் பயிர்ச் செய்கை, மரக்கறிப் பயிர்ச் செய்கை, மேலதிக பயிர்ச் செய்கைகள் போன்றவற்றின் உற்பத்திச் செலவைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பது எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், அந்த நோக்கங்களை அடைந்ததற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	மற்றும், அளவுகோல்களைப் பூர்த்தி செய்த பயனாளிகள் வந்து பணம் செலுத்தியதன் அடிப்படையில் பிரதேச செயலக மட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கை தெரிவு செய்யப்பட்டது என்பது, திட்டம் ஆரம்பக் கட்டத்தில் இருப்பதால் எதிர்வரும் வருடங்களில் நோக்கங்களை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது என்பது.	வழிநடத்தி விரைவான வேலைத்திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும்.
(ட)	அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 233 பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 16.51 மில்லியன் செலவில் வெள்ளாடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ், நோக்கத்திற்குப் புறம்பாக செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்காக 66 வெள்ளாடுகள் பெறப்பட்டிருந்ததுடன், 36 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 91 வெள்ளாடுகளை பிறருக்கு விற்றமை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 699 வெள்ளாடுகளில் 113 வெள்ளாடுகள் ஒரு வருட காலப்பகுதியில் இறந்திருந்ததுடன் அதன்பிறகு வழங்கப்பட்ட மேலும் 19 வெள்ளாடுகளும் இறந்திருந்தன. பல்வேறு காரணங்களால் காப்புறுதி இழப்பீடு இழந்த சந்தர்ப்பங்களும் இருந்ததுடன் மேலும், 102 பெண் வெள்ளாடுகள் குட்டிகள் ஈன்றிருக்கவில்லை. அத்துடன், பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வெள்ளாடு வகை பால் பெறுவதற்கு ஏற்ற வகை அல்ல என்றும்,	பிரதேச செயலக அலுவலகங்கள் மூலம் தொடர் நடவடிக்கை அறிக்கைகளைக் கோருவதாகவும், ஒப்பந்தத்தின் பிரகாரம் வெள்ளாடுகளைத் தமது பொறுப்பில் வைத்திருக்காத பயனாளிகள் தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க உள்ள சாத்தியக்கூறுகள் குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், பயனாளிகளை அறிவூட்டுதல் மற்றும் எதிர்காலத்தில் திட்டத்தின் நோக்கங்களை அடையத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் தொடர் நடவடிக்கை பணிகளைச் செய்வதாகவும் தெரிவித்தார்.	முறையான பரீட்சிப்பு நடத்தி, சரியான திட்டமிடல் மற்றும் ஆய்வு இன்றி திட்டங்களை நடைமுறைப்படுத்திய தரப்பினர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்தல், திட்டத்தின் ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய செயற்படாத தரப்பினர் மீது தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொடர் நடவடிக்கை பணிகளைக் கடுமையாக்கி திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

	வெள்ளாட்டு பால் மற்றும் இறைச்சியை விற்பனை செய்வதன் மூலம் வருமானம் ஈட்டப்படாததால் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.		
(ண)	அம்பாந்தோட்டை பிரதேச செயலக அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வள மத்திய நிலையத்திற்காக துல்லியமான தரவு முறைமை தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்திய நிலையத்திற்காக வருடாந்த செயல் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காகக் கட்டட வாடகையாக மொத்தம் ரூபா 372,000 மற்றும் மத்திய நிலையப் பணியாளர்களுக்காக 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலும் மொத்தம் ரூபா 3.12 மில்லியன் சம்பளமும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மத்திய நிலையதை நடத்தும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான திட்டங்களை மத்திய நிலையத்தில் நடைமுறைப்படுத்தப் போதுமான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் வருடாந்த செயல் திட்டம் தயாரிப்பது அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழங்கப்படவுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் அனுமதிகளுக்கமைய இடம்பெறும் என்பது. அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் அமைச்சு ஒதுக்கீடுகளை வழங்காவிட்டாலும் தொழில்நுட்பப் பரிமாற்றத் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது.	இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையைப் பராமரிக்கவும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வள மத்திய நிலையங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(த)	அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் கீழ் நிறுவப்பட்ட கிராம சக்தி மக்கள் சங்கங்களில், செயலற்ற 39 சங்கங்களின் சேமிப்புக் கணக்குகளில் ரூபா 10.88 மில்லியன் அறிக்கையின் திகதியில் செயலற்ற நிலையில் இருந்ததுடன், செயலற்ற 03 சங்கங்களால் 50 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 840,344 பெறுமதியான கடன்கள் 03 வருடங்களுக்கும் மேலாக	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும்	செயலற்ற சங்கங்களைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து நோக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட நிதியை முறையாகக் கையகப்படுத்த வேண்டும், அத்துடன் நிலுவைக் கடனையும் வட்டியையும் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலுவையாக இருந்ததுடன், செயல்பாட்டில் உள்ள 05 சங்கங்களால் 70 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சுழல் கடனில் மொத்தம் ரூபா 666,990 பெறுமதியான கடனும் வட்டியும் குறிப்பிடத்தக்க காலம் நிலுவையாக இருந்ததாக அவதானிக்கப்பட்ட.	விரைவாகக் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

அவதானிப்புக்கள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
(i) நிதிப் பிரமாணம் 137(5) மற்றும் 237(ஆ)	14,010,371	சுட்டிக்காட்டப்பட்ட பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல், அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் மொத்தம் ரூபா 14,010,371 பெறுமதியான பொருட்கள் வழங்கப்படாமலேயே 2024 திசெம்பர் மாதத்தில் காசோலைகளை எழுதி வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் மொத்தம் ரூபா 4,921,371 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 பெப்ரவரி 10 ஆம் திகதி வரையிலும் வழங்கப்படவில்லை.	எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாதவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்தத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி உத்தியோகத்தர்கள் அறிவூட்ப்பட்டுள்ளனர் என்பது.	நிதி பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அதற்கு இணங்கி நடக்காத உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	நிதிப் பிரமாணம் 208(2)(ஈ)	345,710	ஒதுக்கப்பட்ட நிதியை உரிய பணிகளுக்கே பயன்படுத்த வேண்டிய போதிலும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் அகுணகொலபெலஸ்ஸ பிரதேச செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிர்வாகச் செலவுகளிலிருந்து, அதனுடன் தொடர்பில்லாத உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் மற்றும் விடுமுறை தினச் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன.	உத்தியோகத்தர்கள் மனம் தளராவண்ணம் தடுப்பதற்காக, மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, திட்டத்திற்குப் புறம்பான வேறு பணிகளுக்காக உத்தியோகத்தர்கள் மாதாந்தம் செய்யும் கடமைகளுக்கான மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்ட பயணச் செலவுகள் மற்றும் நாட் சம்பள வவுச்சர்களுக்காக பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது.	ஒதுக்கீடுகளை வழங்கப்பட்ட பணிகளுக்குப் புறம்பாகச் செலவு செய்த உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2023 கொண்ட தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் 4.2(i) (அ) பந்தியின் அறிவுறுத்தல்களின்படி, வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத மற்றும் 2024 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் வழங்கப்படாத, ஒருங்கிணைப்பு கொடுப்பனவின் கீழ், 2016 ஜனவரி மாதம் முதல் 2024 ஏப்ரல் மாதம் வரையான காலப் பகுதிக்கு மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிலுவையிலுள்ள ஒருங்கிணைப்புக் கொடுப்பனவாக	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	முறையான பரீட்சிப்பினை நடத்தி, அதிகாரமின்றிச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவிடவும், அத்துடன் சட்டவிரோதமாகப் பணம் செலுத்திய உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

மொத்தம் ரூபா 851,129 மற்றும் நான்கு உத்தியோகத்தர்களுக்கு 2024 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான கொடுப்பனவுகளாக ரூபா 120,000 சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. அதே போன்று, இந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது நிதிப் பிரமாணம் 136(1), 138(1), 138(6), 128(1) (ஒ) ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் செயற்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது.

3.7 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வேலை நிறுத்தம் செய்யப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் ரூபா 747,267 கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்துடன், அதில் மொத்தம் ரூபா 513,223 கடன் மீதி 03 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரியது என்பது அவதானிக்கப்பட்டது.	02 உத்தியோகத்தர்களிட மிருந்து கடன் மீதி அறவிடப்பட்டுள்ளது என்பது, மிகுதி உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதியை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது.	காலத்துக்குக் காலம் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கடன் மீதியைத் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சேவையை விட்டு விலகிய 07 உத்தியோகத்தர்களிட மிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 667,932 கடன் மீதி அறவிடப்பட்டிருக்காததுடன், அந்தக் கடன் மீதி தொடர்பாக 2019 ஜுன் 27 ஆம் திகதியிடப்பட்ட இல. 05/2019 அரச நிதிச் சுற்றறிக்கையின்	அவதானிப்பை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது, கடன் மீதியை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது	- மேற்படி -

3(உ) பந்தியின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இளம் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள் முன்னோடித் திட்டத்தின் மூலம் அரிசி மா உற்பத்தித் திட்டத்திற்காக ரூபா 2.52 மில்லியன் ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகத்தினால் விவரக்குறிப்புகளுக்கு இணங்காத, குறைந்த வினைத்திறன் கொண்ட அரிசி மா உற்பத்தி இயந்திரங்களை கொள்வனவு செய்தமையினால், திட்டத்திற்காக விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் ரூபா 1.8 மில்லியன் மீண்டும் விவசாய அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.	பயனாளிகளின் விருப்பத்தின் பேரில் குறைந்த வினைத்திறன் கொண்ட அரிசி மா இயந்திரங்கள் வழங்கப்பட்டதனால் மிகுதி ஒதுக்கீடுகள் விவசாய அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டது என்பது.	முறையான பரீட்சிப்பு நடத்தி, திட்டத்தின் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் ஒதுக்கப்பட்ட நிதியை பயனுள்ள வகையில் பயன்படுத்தாத உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 180 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வெளியிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) வரைபு செயலாற்றல் அறிக்கையின் 2 ஆவது அத்தியாயத்தில் முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் நோக்கு என்பதன் கீழ் உள்ள 06 ஆவது விடயத்தின் மூலம், ரூபா 172 மில்லியன் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் இளம் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள் செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்தத் செயற்திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் அமைக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டங்களின் கண்காணிப்பு பலவீனமாக இருந்தது. அதே போன்று, திட்டங்கள் தொடர்பாகச் செயலாற்றுகைச் சுட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்காததுடன், திட்டங்களால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படவில்லை.	செயற்திட்டத்தில் சில குறைபாடுகள் இருந்தபோதிலும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்தும் எடுக்கப்பட்டு வருகின்றது என்பது.	நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பான சரியான தகவல்கள் வருடாந்தச் செயலாற்றுகை அறிக்கையின் மூலம் வெளியிடப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 உள்நாட்டு நிதிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் - 2023 – கொடித்தோடை பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கு ரூபா 2.34 மில்லியன் செலவில் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தாலும், 47 பயனாளிகள் திட்டத்திலிருந்து எவ்வித வருமானத்தையும் ஈட்டவில்லை என்பதனால்	நாற்றுக்கள் நடப்பட்ட பின்னர் ஏற்பட்ட பூஞ்சண நோய் மற்றும் அதிக மழைப் பொழிவு காரணமாகச் சில நாற்றுக்கள் அழிந்துள்ளதாகவும், அழிந்த நாற்றுக்களுக்குப் பதிலாக வேறு நாற்றுக்களை நட்டுப் பயிர்ச்செய்கை	செயற்திட்டத்தின் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் பயனாளிகளைத் தெரிவு செய்யப்பட வேணடியதுடன் தொடர் நடவடிக்கை பணிகளை முறையாகச் செய்து திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய

	பயனாளிகளுக்கு நிரந்தர வருமான வழிகளை உருவாக்கும் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.	நடவடிக்கைகளைத் தொடரத் தேவையான அறிவுறுத்தல்களும் தொடர் நடவடிக்கை பணிகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.	வேலைத்திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும்.
(ஆ)	2023 ஒக்தோபர் மாதத்தில் நிர்மாணம் நிறைவு செய்யப்பட்ட அகுணகொலபெலஸ்ஸ புதிய பிரதேச செயலகக் கட்டடத்தின் சுவர்களில் 141 இடங்களில் 0.2 மீற்றர் முதல் 6 மீற்றர் வரையான வீச்சில் மொத்தம் 147.25 மீற்றர் நீளத்துக்கும் மற்றும் தரையில் 32 இடங்களில் 239.02 சதுர மீற்றர் பரப்பளவுக்கும் வெடிப்புகள் / பிளவுகள் காணப்பட்டதாகப் பௌதீகப் பரீட்சிப்பின்போது அவதானிக்கப்பட்டது.	குறித்த குறைபாடுகளைப் பூர்த்தி செய்யுமாறு ஒப்பந்தக்காரருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது.	சரியான தரத்துடன் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டியதுடன், குறைபாடுகள் இருந்தபோதிலும் பணம் செலுத்திய உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	லுணுகம்வெஹெர பிரதேச செயலகப் புதிய கட்டடத்தின் சுவர்களில், கட்டடத்தைச் சுற்றியுள்ள நடைபாதையிலும் (Pavement), மேல் மாடியில் நீர் புகாதவாறு (Water Proofing) செய்யப்பட்ட தளத்திலும் 40 இடங்களில் 182 சதுர மீற்றர் பரப்பளவில் வெடிப்புகள், பிளவுகள் மற்றும் பலவீனங்கள் காணப்பட்டதுடன், கட்டடத்தின் தளத்தில் வர்ணம் பூசுதல் முறையான பூச்சுடன் செய்யப்படாததால், கட்டடத்தைப் பயன்படுத்த ஆரம்பித்த உடனேயே பல இடங்களில் மீண்டும் வர்ணம் பூசுவதற்காக ரூபா 116,230 செலவிடப்பட்டிருந்தது.	குறித்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதன் பின்னர் அந்தக் குறைபாடுகளைச் சரிசெய்ய ஒப்பந்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது என்பது.	- மேற்படி -
(ஈ)	லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்தால் உடமத்தல கனிஷ்ட	செய்யப்படாத பணிகளுக்காக	முறையான பரீட்சிப்பு நடத்தி, அதிகமாகச்

	வித்தியாலயத்தின் திருத்தப் பணிகள் திட்டம், ஜயமக குடாகம்மான 04 பொது விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் திட்டம் மற்றும் தெவுரம்வெஹெர போகஹவெவ சமூக நீர்த் திட்டத்தின் கீழ் கலஹிட்டியாவிலிருந்து இலுக்பெலஸ்ஸ வரையான குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றில் செய்யப்படாத பணிகளுக்காக ரூபா 189,783 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.	அதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	செலுத்தப்பட்ட பணத்தை உடனடியாக அறவிடவும், அதற்குரிய தரப்பினர் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.
(உ)	அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தால் ருவன்புர ரொட்டரி வீதியின் வலதுபுறம் பாதியில் நிறைவு செய்யப்பட்ட வடிகால் ஒழுங்கமைப்பை அமைத்தல், கபுவத்த கட்டுவெவ விவசாய வீதியின் குறுக்கே உள்ள கபுவத்த பஸ்னாவட கால்வாய் அமைக்கும் பணி மற்றும் பள்ளேமலல கமத்தொழில் சேவை மத்திய நிலையத்தின் ஹெல பொஜுன்ஹல அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றுக்காக மொத்தம் ரூபா 3.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், கொங்கிறீட் பயன்படுத்திச் செய்யப்படும் நிர்மாணங்களின் தரத்தைப் பரிசோதிக்க மிகவும் பொருத்தமான கொங்கிறீட் கூம்புப் பரிசோதனை செய்யப்படாமல், பரிசோதனை Rebound Hammer Test முறையில் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டிருந்தது.	இது தொடர்பாக பொறியியல் சேவைகள் பிரதிப் பிரதம செயலாளரிடமிருந்து விளக்கங்களைப் பெற்று அறிக்கையிடப்படும் என்பது மற்றும் ரீபோர்ன் ஹேமர் டெஸ்ட் என்பது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மிகவும் உயர்ந்த தரத்தைக் கொண்ட தரப் பரிசோதனை தான் என்பது.	முறையான பரிசோதனை நடத்தி, நிர்மாணங்களின் தரம் குறித்து உறுதிப்படுத்த வேண்டும்.
(ஊ)	கட்டுவன பிரதேச செயலகத்தால் 2023 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ரூபா 06 மில்லியன் ஒதுக்கீட்டிலிருந்து செயற்படுத்தப்பட்ட கட்டுவன மெதகந்த தொலெதெனிய வாய்க்காலுக்கான பெட்டி கால்வாய் அமைக்கும் திட்டத்துடன் தொடர்புடைய தரப் பரிசோதனையின்போது, கொங்கிறீட் கூம்புகள் எதிர்பார்க்கப்பட்ட	மாவட்டப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி Hammer Test பரிசோதனை செய்யப்பட்டு, பணம் செலுத்தப்பட்டது என்பது.	நிர்மாணங்கள் மதிப்பீட்டுடின்படி உரிய தரத்துடன் நிறைவு செய்யப்பட்ட பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அழுத்த மட்டத்தைவிடக் குறைவாக இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், தடுத்து வைக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டு ரூபா 3.35 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.		
(எ)	திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தால் மெதிரிகிரிபுர கிராமத்தின் வீதி கொங்கிறீட் இடுதல், ரோஹணபுர மயானத்திற்கு அருகில் இருந்து உப வீதியில் கால்வாய் அமைத்தல் போன்ற திட்டங்களில் பரிசோதிக்கப்பட்ட கொங்கிறீட் கூம்புகள், எதிர்பார்க்கப்பட்ட அழுத்த வலிமையை விடக் குறைவாக இருந்த காரணத்தால், அதற்குப் பொருத்தமற்ற பரிசோதனையான Reborn Hammer Test செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மொத்தம் ரூபா 3.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நிர்மாணிக்கப்பட்ட மெதிரிகிரிபுர வீதியில் 07 இடங்களில் 35 சதுர மீற்றர் பரப்பளவில் பிளவுகள் / வெடிப்புகள் ஏற்பட்டிருந்தன. அத்துடன், வீதியின் அடித்தளம் மற்றும் மேடைகளுக்காக மண் இடுவதற்குத் தெற்கு மாகாண வீதி விலைப்பட்டியலில் உள்ள இயந்திர விலையைப் பயன்படுத்தாமல் மனித உழைப்பின் விலை பயன்படுத்தப்பட்டு மதிப்பீட்டுப்பட்டுப் பணம் செலுத்தப்பட்டமையினால் ரூபா 71,094 நட்டமும் ஏற்பட்டிருந்தது.	மாவட்டப் பொறியியலாளரால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பேரில் பணம் செலுத்தப்பட்டது என்பது.	முறையான பரிசோதனை நடத்தி, சரியான தரமற்ற நிர்மாணங்களுக்காகப் பணம் செலுத்திய உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், உள்ள குறைபாடுகளை விரைவாகப் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் மாவட்டச் செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குறைந்த	தேசிய போட்டி விலைமனுக்களைக் கோரிப் பணிகளை மேற்கொள்ளப் போதுமான கால அவகாசம்	முறையான பரீட்சிப்பு நடத்தி, 2006 அரச பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் ஏற்பாடுகளைப்

	வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்காக ரூபா 431.04 மில்லியன் பெறுமதியான 2,317,400 கிலோ கிராம் அரிசி கொள்வனவு செய்யும்போது பெறுகை வழிகாட்டல்களின்படி செயற்பட்டிருக்காததுடன், உத்தியோகத்தர்கள் நிதிப் பரிவர்த்தனைகளைச் சிக்கனமாக மேற்கொள்ளாதமையினால், திட்டத்தின் I ஆம் கட்டத்திற்காக அரசாங்கத்திற்கு ரூபா 34.9 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.	இல்லாததாலும், அரசாங்க விடுமுறை நாட்கள் அதிகமாக இருந்ததாலும், பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 1.3.2 பந்தியின்படி செயற்பட முடியவில்லை என்பது மற்றும் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டியிருந்ததால் பிரதேச செயலகங்கள் அரிசியைப் பெற்று விநியோகம் செய்தது என்பது மற்றும் மேற்படி சுற்றறிக்கையின் 2.3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி உறுதிப்படுத்தப்பட்ட விலைகளின் கீழ் தரமான அரிசி கொள்வனவு செய்யப்பட்டது என்பது.	பின்பற்றாததற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும்.
(ஆ)	அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தால் இளம் விவசாய தொழில்முனைவோர் கிராமங்கள் முன்னோடித் திட்டத்தின் கீழ், 05 அரிசி மா உற்பத்தி இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும்போது, விலைமனு கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தொழில்நுட்ப விவரக்குறிப்புகளை மதிப்பீடு செய்யாமல், அந்த விவரக்குறிப்புகளுக்கு அனுப்பப்பட்ட விலைகளை நிராகரித்து, நிர்ணயிக்கப்பட்ட விவரக்குறிப்புகளை விடக் குறைந்த வினைத்திறன் கொண்ட இயந்திரம் பெறப்பட்டமையினால் அரசாங்கத்திற்கு ரூபா 148,500 நட்டம் ஏற்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இந்தக் கொள்வனவின்போது விலைமனு மதிப்பீட்டுடின் நோக்கங்கள் மற்றும் பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 1.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்வனவு நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் பயனாளிகளின் தேவையின் அடிப்படையில் 10HP அரிசி அரைக்கும் இயந்திரங்களுக்குப் பதிலாக 3HP அரிசி அரைக்கும் இயந்திரங்கள் தேவைப்பட்டதால், அதன் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீடு செய்யப்பட்டது என்பது.	2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் தொகுப்பின் 7.7 பந்தியின் ஏற்பாடுகளின்படி செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஏற்பட்ட நட்டத்தைப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும்.

(இ)	மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக வாகனங்களுக்காக ரூபா 980,000 பெறுமதியான 14 பின்னோக்குக் கமராக்களைக் கொள்வனவு செய்யும்போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உதவியைப் பெறாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், பின்னோக்குக் கமராக்களுக்கான விலை கோரலுடன் தொடர்புடைய விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்த அலகு ஒன்றை ரூபா 44,000 இற்குக் கொள்வனவு செய்ய வாய்ப்பு இருந்தபோதிலும், ஒவ்வொன்றும் ரூபா 70,000 வீதம் மொத்தம் ரூபா 980,000 பெறுமதியான 14 கமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 364,000 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், ரூபா 70,000 இற்குக் கொள்வனவு செய்வதற்கான காரணங்கள் கொள்வனவுத் தீர்மானத்தின் மூலம் தெளிவுபடுத்தப்படவில்லை.	அவதானிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், இயந்திரப் பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் பேரில் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின்றி பெறுகைகள் குழுவின் தீர்மானத்திற்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டது என்பதும், ஆரம்ப விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்ததை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல், உத்தரவாதக் காலம் மற்றும் சந்தை நாமத்தைக் கருத்திற்கொண்டு பின்னோக்குக் கமராக்கள் தெரிவு செய்யப்பட்டது என்பது.	முறையான பரீட்சிப்பு நடத்தி, 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் தொகுப்பின் ஏற்பாடுகளின்படி ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலாளருக்காக ஒதுக்கப்பட்ட அரச குடியிருப்பில் பழைய பண்டங்கள் பட்டியலுக்குப் பதிலாக 2024 ஆம் ஆண்டில் புதிய பண்டங்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பழைய மற்றும் புதிய பண்டங்கள் பட்டியல்களுக்கு அமையச் சரிபார்ப்பின்போது, 63 வகையான பொருட்களில் 220 அலகுகள் பற்றாக்குறையாகவும் மற்றும் 21 வகையான பொருட்களில் 70 அலகுகள் மிகையாகவும் இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், பற்றாக்குறை தொடர்பாக நிதிப்	பழைய மற்றும் புதிய பண்டங்கள் பட்டியல்களில் உள்ள பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாகப் பரீட்சிப்பு செய்வதற்கு குழுவொன்றை நியமித்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்பது.	பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 இன் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகைப் பொருட்களை முறையாகப் பதிவேட்டில் உள்ளடக்கவும், பண்டங்கள் பட்டியலை முறையாகவும் சரியாகவும் இற்றைப்படுத்திப் பேணவும் வேண்டும்.

	பிரமாணம் 103 இன் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
(ஆ)	மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான ஒரு கெப் வண்டி, ஒரு முச்சக்கர வண்டி மற்றும் 13 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாமல் செயலற்றுக் காணப்பட்டன.	எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் வாகனங்களை முறையாக அகற்ற அல்லது திருத்தம் செய்து பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்பது.	வாகனங்களைச் செயலற்று விடாமல் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும் அல்லது முறையான நடைமுறையின்படி அகற்ற வேண்டும்.
(இ)	பெலிஅத்த பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்ட அரச குடியிருப்பு திருத்தம் செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 4.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் குடியிருப்பு வசிப்பிடப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படாமல் அலுவலகத்தின் களஞ்சிய வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், உதவிப் பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்ட குடியிருப்பு சமூக சேவைப் பிரிவை நடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வலஸ்முல்ல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 02 அரச குடியிருப்புகள் அலுவலகத்தின் களஞ்சிய வசதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதும் அவதானிக்கப்பட்டது.	குறித்த அலுவலகத்தில் இட வசதி குறைவாக உள்ளதாலும், குடியிருப்புகள் அலுவலகத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதாலும், அலுவலகத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது மற்றும் எதிர்காலத்தில் பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி அதிகாரபூர்வக் குடியிருப்புகளைப் பயன்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்பது.	அரச குடியிருப்புகள் நோக்காகக் கொள்ளப்பட்ட செயல்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	2024 ஜனவரி 10 ஆம் திகதியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் 7.5 பந்தியின்படி, அரசாங்கத்திற்குச் சொந்தமான குறைந்த பயன்பாட்டிலுள்ள கட்டடங்களை உகந்த முறையில் பயன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 05	சேதமடைந்த நிலையில் இருக்கின்றது என்பது மற்றும் எதிர்காலத்தில் திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	அரச குடியிருப்புகள் நோக்காகக் கொள்ளப்பட்ட செயல்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

	பிரதேச செயலகங்களில் உள்ள 07 அரச குடியிருப்புகள் வசிப்பிடப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படாமல் குறைந்த பயன்பாட்டில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது.		

4.6 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தில் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் மற்றும் பெட்டகத்தில் இருந்த பணத்தைத் திருடுதல் தொடர்பாக, நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் இறுதிப் பரீட்சிப்புச் சபையின் அறிக்கையின் மூலம் ரூபா 1.94 மில்லியன் இழப்பை பிரதேச செயலகத்திற்குப் பாதுகாப்பு சேவையை வழங்கிய நிறுவனத்திடமிருந்தும் மற்றும் அந்த அலுவலகத்தின் ஐந்து அரச உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த இழப்பிலிருந்து எந்தத் தொகையும் அறவிடப்படவில்லை.	உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமும் மற்றும் பாதுகாப்பு சேவையை வழங்கிய நிறுவனம் பணம் செலுத்தாததால் அது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்தும் ஆலோசனை கோரப்பட்டுள்ளது என்பது.	அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை தாமதமின்றி ஈடுசெய்ய வேண்டும்.
(ஆ)	அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் மற்றும் பெலியத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 04 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பான ரூபா 220,479 நட்டச் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 105 (2) இன் பிரகாரம் அறவிட வேண்டிய தொகையைத் தீர்மானித்தும், அந்த நட்டச் சேதங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களையும் மற்றும் அந்தந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையையும் தீர்மானித்து அந்த நட்டச் சேதங்களின் மதிப்பை அறவிட	நட்டச் சேதங்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து அறவிட எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது.	நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்காத பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், அத்துடன் ஏற்பட்ட சேதங்களுக்கான மதிப்பை தாமதமின்றி அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், விபத்துக்கள் ஏற்பட்டு 06 வருடங்களுக்கு மேல் ஆகியிருந்த போதிலும் குறித்த நட்டத்தினைப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.		
(இ)	அகுணகொளபெலஸ்ஸ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கெப் வண்டி 2023 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளானமையினால் ரூபா 95,000 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது எனினும், சேதம் ஏற்பட்டபோது காப்புறுதி உரிமைகோரும் விண்ணப்பப் படிவத்தில் விபத்து ஏற்பட்ட விதம் குறிப்பிடப்படாததால், காப்புறுதி நிறுவனம் காப்புறுதி உரிமைகோரலை நிராகரித்திருந்தது. இதன் பிரகாரம் கடமை தவறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து குறித்த இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காப்புறுதி உரிமைகோரும்போது விபத்து ஏற்பட்ட விதம் குறிப்பிடப்படாததால், குறித்த காப்புறுதி நிறுவனம் காப்புறுதி உரிமைகோரரைலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது.	பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட வேண்டும்.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தில் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய மொத்தம் ரூபா 1.66 மில்லியன் கொள்வனவு அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பண வட்டி மற்றும் 2024 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் ரூபா 320,000 என்பன கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2024 ஒக்டோபர் 09 ஆம் திகதி வரையிலும் நிலுவையில் இருந்தன.	வரி தொடர்பான உத்தியோகத்தர் அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்காமல் இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர், அந்த விடயம் குறித்து அறிவுள்ள உத்தியோகத்தர் இல்லாததால் நிலுவைப் பணங்கள் அறவிடப்படவில்லை என்பதும் மற்றும் உத்தியோகத்தர் ஒருவரை வழங்குமாறு கோரி காணி ஆணையாளருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது	நிலுவைப் பணங்கள் மற்றும் தண்டப் பணங்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		என்பது மற்றும் அறவிடும் பணிகளைச் சரியாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	
(ஆ)	கட்டுவன பிரதேச செயலகத்தின் அம்பகஸ்ஆர பிரிவில் சுமார் 02 ஏக்கர் அரச காணியை துப்பரவு செய்து அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை தொடர்பாக 2023 மார்ச் மாதம் கிராம அலுவலரால் அறிவிக்கப்பட்டிருந்தும், கணக்காய்வுத் திகதியான 2024 நவம்பர் 11 ஆம் திகதி வரையிலும் அத்துமீறியவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனைத்து அத்துமீறியவர்களையும் ஒரே நேரத்தில் வெளியேற்றுவதற்காக மீண்டும் ஆ.ஏ.60 அறிக்கை ஒன்றைப் பெறுமாறு கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது.	அத்துமீறியவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அத்துமீறியவரை வெளியேற்ற விரைவாக நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.
(இ)	கமநெகும திட்டம் 2011 இன் கீழ் கட்டக்கடுவ தெற்கு வாடியகொட வயல்வெளிக்குச் செல்லும் வீதியை கொங்கிறீட் கற்களைப் பதித்து அபிவிருத்தி செய்யும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர், திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக தங்காலை பிரதேச செயலாளர் 2011 நவம்பர் 30 ஆம் திகதி விவசாய அமைப்புடன் ரூபா 437,799 இற்கு ஒப்பந்தம் செய்திருந்தார். செயற்திட்டம் தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் காணியின் உரிமையாளரின் ஒப்புதல் முறையாகப் பெறப்படாததால், 2024 ஆம் ஆண்டு வரையிலும் காணியின் உரிமையாளர் அந்தத் திட்டம் தொடர்பாக எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக அவதானிக்கப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்வதாகவும், காணி தொடர்பாக நட்டஈடு வழங்குவது பொருத்தமானது எனத் தங்காலை பிரதேச சபைக்கு அறிவித்துள்ளது என்பது.	அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு முன்னர் உரிய தரப்பினரிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினர் மீது முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	11 பிரதேச செயலகங்களால் 36 ஓய்வூதியர்களுக்கு அதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 8.89 மில்லியன் ஓய்வூதியத்தில், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 5.32 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது மற்றும் இன்னமும் ரூபா 4,757,007 அறவிடப்பட வேண்டியுள்ளது என்பது.	முறையான பரீட்சிப்பு நடத்தி, உத்தியோகத்தர்கள் முறைகேடு செய்திருந்தால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவும், அதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தை விரைவாக அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	03 பிரதேச செயலகங்களால் பயனாளிகளுக்கு அதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 474,000 பெறுமதியான முதியோர் கொடுப்பனவுகள், அங்கவீனமானோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.	குறித்த பிரதேச செயலகங்களால் அதிகமாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்பட்டு வருகின்றது என்பது.	அதிகமாகச் செலுத்திய உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், அதிகமாகச் செலுத்தப்பட்ட முதியோர் கொடுப்பனவுகள், அங்கவீனமானோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகளை விரைவாக அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்ட சமூக அடிப்படையிலான சமுர்த்தி வங்கிகளால் 4,736 கடனாளிகளுக்கு மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் வழங்கப்பட்ட ரூபா 327.13 மில்லியன் கடன்கள் காலங் கடந்திருந்ததாகவும், 1,475 கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 130.47 மில்லியன் கடன்கள் மீட்கப்பட முடியாத கடன்களாக அடையாளம் காணப்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது.	மாவட்டச் சமுர்த்தி அலுவலகத்திலிருந்து பதில் கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.	காலத்துக்குக் காலம் கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீது முறையான விசாரணை நடத்தவும், காலங் கடந்த கடன்களை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.
(எ)	05 பிரதேச செயலகங்களால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்ட காணி மற்றும் சொத்துக்கள் தொடர்பாக 50	நிலுவைக் குத்தகைப் பணத்தை அறவிடவும் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கவும்	காலத்துக்குக் காலம் குத்தகைப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள்

குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 11.51 மில்லியன் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.	நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.	மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், உரிய குத்தகைப் பணத்தை அறவிட விரைவாக நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 04/2023 இன் 4.4 பந்தியின் மூலம், 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுகளை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைப்பது அத்தியாவசியம் என்றும், நிறுவனத்தின் அனைத்து வரவு செலவுத்திட்டச் செலவுத் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் இணைக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அந்தத் தகவல்கள் நிலைபேறான அபிவிருத்திச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகம் அவ்வாறு செயற்படவில்லை.	2025 ஆம் ஆண்டுக்குரிய 263 வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் இணைக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.	குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. நல்லாளுகை

6.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுமக்களின் வாழ்க்கைக்கும் உடைமைகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ள காட்டு	2022 முதல் 2024 வரை மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 26 எனத்	பொதுமக்களுக்கு ஒரு உணர்வுபூர்வமான பிரச்சினையாக இருக்கும் காட்டு யானைப்

	யானைகளால் ஏற்படும் சேதங்களுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாததால், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் காட்டு யானைத் தாக்குதல்களால் 26 உயிரிழப்புகளும், 23 உடல் ரீதியான காயங்களும், 255 சொத்துச் சேதங்களும் பதிவாகியிருந்ததுடன், ஏற்பட்ட சேதங்களுக்காக மொத்தம் ரூபா 41.18 மில்லியன் நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது.	தெரிவித்தார்.	பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(ஆ)	காட்டு யானைத் தாக்குதலால் ஏற்பட்ட உடல் மற்றும் சொத்துச் சேதங்களுக்கான நட்டஈட்டிற்காக, விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1 - 3 வருடங்களுக்கு மேல் ஆன 48 விண்ணப்பங்களுக்கும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 28 விண்ணப்பங்களுக்கும் வனவிலங்கு களப் பரிசோதனை அறிக்கைகள் கிடைக்காததால், பணம் செலுத்துவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் தாமதமாகி வருவதாக அவதானிக்கப்பட்டது.	குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரும் மற்றும் வனவிலங்கு அறிக்கைகள் கிடைத்ததன் பின்னரும் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்பது.	பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்குத் தாமதமின்றி நட்டஈடு வழங்கக்கூடிய வகையில் தகுந்த வேலைத்திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும்.
(இ)	பெலிஅத்த பிரதேச செயலகத்தின் சேவைச் சாசனத்தின்படி, மரம் வெட்டுவதற்கான சம்பந்தப்பட்ட பரிந்துரைகளுடன் கூடிய விண்ணப்பம் கிடைத்த 07 நாட்களுக்குள் அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், விண்ணப்பம் கிடைத்ததன் பின்னர் மரம் வெட்டுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு 03 மாதங்கள் முதல் 5½ மாதங்கள் வரை கால அவகாசம் எடுத்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதியான 2024 ஜூன் 24 ஆம் திகதி வரையிலும் 2023 மே 05 ஆம் திகதி முதல் 2024 ஜூன் 03 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 38 விண்ணப்பங்கள் தொடர்பாக	விண்ணப்பங்களைப் பரிசோதிக்கும்போது ஏற்பட்ட குறைபாடுகளால் தாமதங்கள் ஏற்பட்டது என்பது மற்றும் எதிர்காலத்தில் மரம் வெட்டுவதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது குறைபாடுகள் இன்றிப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது.	காலத்துக்குக் காலம் செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், அத்துடன் நடைமுறையிலுள்ள குடிமக்கள் / சேவைச் சாசனத்தின்படி பணிகள் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவும் வேண்டும்.

	மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
(ஈ)	1989 மார்ச் 23 ஆம் திகதியிடப்பட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/89 இன் படி, பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுப்பது அதிகபட்சம் இரண்டு வாரங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும், அம்பலாந்தோட்டை, அம்பாந்தோட்டை, கட்டுவன, திஸ்ஸமஹாராம மற்றும் சூரியவெவ ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உரியதாகக் கிடைத்திருந்த 07 பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கையிடப்படவில்லை.	பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது என்பது.	உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் மாவட்டச் செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உண்மைப் பதவியணிகளின்படி, 26 வெற்றிடங்களும் மற்றும் 117 மிகைகளும் காணப்பட்டதாகவும், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (அபிவிருத்தி) பதவிகளுக்காக 268 உத்தியோகத்தர்கள் மேலதிகமாக இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் பதவியணி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மற்றும் மிகையான பதவியணியினை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் உள்ளடக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	பதவியணித் தேவைப்பாடுகளை மீளாய்வு செய்து, நிறுவன நோக்கங்களை அடையக்கூடிய வகையில் முறையான பதவியணி முகாமைத்துவத்தை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ)	மாவட்டச் செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களில் 27 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் (மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகள்) மற்றும் 12 தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்களும் இணைக்கப்பட்டிருந்தாலும், மொத்தமாக 13 அலுவலகங்களிலும் அந்த உத்தியோகத்தர்களை நன்றாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் மிகவும் திறமையான மற்றும் வினைத்திறன் மிக்க சேவையை வழங்கத் தவறியிருந்தனர். இந்த நிலைமையின் கீழ் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இல்லாததால், மீளாய்வாண்டில் ரூபா 28.75 மில்லியன் ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்ட 09 செயற்திட்டங்களைச் செயற்படுத்த முடியாமல் போயிருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது.	தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அலுவலகத்தில் நிலவும் சமநிலையற்ற தன்மை தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	- மேற்படி -
(இ)	அகுணகொளபெலஸ்ஸ பிரதேச செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிணின்படி ஐந்து அலுவலகப் பணி உதவியாளர்கள் சேவையில் இருக்கும்போது, அலுவலகப் பணிகளுக்காக 10 பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் 2020 ஒக்டோபர் மாதம் முதல் 2024 ஜுன் 26 ஆம் திகதி வரையிலும் பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். இந்தக் காலப்பகுதியில் மொத்தம் ரூபா 3.57 மில்லியன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்தப் பணியாளர்களைப் பதவி வெற்றிடங்கள் உள்ள வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்காமல், அலுவலகத்தில் மேலதிகமாகத் தக்கவைக்கப்பட்டிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டது.	பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் தேவைப்படுகிறார்களா என வினவி சுமார் 20 நிறுவனங்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பது.	மிகையான பதவியணியினை வைத்திருப்பதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிக பல்நோக்கு உதவியாளர்களை முறையாக வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.